# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

**********

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),

முறையீட்டு மனு எண்.167/2018/பே.1
ஆணை நாள்: 04-03-2020

திரு. எஸ். சிவபாதம்,
பிளாட் எண். 39,
பங்கஜம்மாள் நகர் விரிவு– II,
நந்திவரம் கூடுவாஞ்சேரி,
சென்னை 603 202. — முறையீட்டு மனுதாரர்.

செயல் அலுவலர்,
நந்திவரம் கூடுவாஞ்சேரி,
பேரூராட்சி,
கூடுவாஞ்சேரி,
காஞ்சிபுரம் மாவட்டம்–603 202. — எதிர் மனுதாரர்.

## ஆணை.

காஞ்சிபுரம் மாவட்டம், நந்திவரம் கூடுவாஞ்சேரி பேரூராட்சி, பங்கஜம்மாள் நகர் விரிவு – II, பிளாட் எண்.39 என்ற முகவரியில் வசிக்கும் திரு. எஸ்.சிவபாதம் என்பவரது 25.07.2018 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 25.07.2018 அன்று பெறப்பட்டு, முறையீட்டு மனு எண். 167/2018 என எண்ணிடப்பட்டது. முறையீட்டு மனு மீதான அறிக்கைகள் பெறப்பட்டு, விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, முறையாக பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவில், காஞ்சிபுரம் மாவட்டம், நந்திவரம் கூடுவாஞ்சேரி பேரூராட்சி 6–வது வார்டு, பங்கஜம்மாள் நகர் விரிவு பகுதி–2ல் மனைப்பிரிவினை ஒட்டியுள்ள பூங்காவினை நகரச்சிறுவர் முதல் அனைத்து மக்கள் உபயோகத்திற்கான பூங்காவாக அமைக்க நந்திவரம்–கூடுவாஞ்சேரி பேரூராட்சியிடம், SRM பள்ளி நிறுவனம் தடையின்மை சான்று பெற்றுத் தர தங்கள் நல வாழ்வு சங்கத்தினை கோரியிருப்பதால், மேற்படி பள்ளி நிறுவனத்தின் மூலம் மேற்படி பூங்காவினை அமைக்க நந்திவரம்–கூடுவாஞ்சேரி பேரூராட்சி, தடையின்மை சான்றினை வழங்க ஆணையிடுமாறு கோரி தனது முறையீட்டு மனுவினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

01.08.2018 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ அழைப்பாணையின்படி இம்முறைமன்ற நடுவத்தில் 20.08.2018 அன்று ஆஜரான முறையீட்டு மனுதாரர் தனது வாக்குமூலத்தில் நந்திவரம் – கூடுவாஞ்சேரி பேரூராட்சி, பங்கஜம்மாள் நகர் விரிவு 1, மற்றும் 2 பகுதியில் தற்போது 116 குடியிருப்புகள் உள்ளதாகவும், இப்பகுதி மனைப்பிரிவில் 2004 மற்றும் 2005ல் மனைகள் விற்பனை செய்யப்பட்டதாகவும், பேரூராட்சிக்கு ஒதுக்கப்பட்ட

பூங்காவிற்கான இடம், பாதை மற்றும் பொதுப்பயன்பாட்டிற்கான இடங்கள் அனைத்தும் மனைப்பிரிவு உரிமையாளரால் நந்திவரம் கூடுவாஞ்சேரி பேரூராட்சி நிர்வாகத்திடம் தானமாக வழங்கப்பட்டு விட்டதாகவும், அப்பகுதியில் அமைந்துள்ள SRM Public School நிர்வாகத்தினர் கடந்த இரண்டரை ஆண்டுகளாக மேற்படி பள்ளியின் கட்டுமான பணிகள் அனைத்தையும் பங்கஜம்மாள் விரிவு–2 ல் பூங்காவிற்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் வைத்துதான் நடத்திக் கொண்டனர் எனவும், Green Pearl Construction என்ற நிறுவனம் SRM கல்வி நிறுவனர் திரு.பச்சைமுத்து என்பவருடைய சொந்த நிறுவனம் எனவும், மேற்படி நிறுவனத்தின் பொது மேலாளர் மேற்படி பூங்காவினை தங்கள் உபயோகத்திற்காக பயன்படுத்திக் கொண்டபோது, மேற்படி பூங்காவினை உருவாக்கித் தருவதாக உறுதி மொழி கொடுத்ததாகவும், SRM கல்வி நிறுவன உரிமையாளரின் மகன் திரு.பி.சத்தியநாராயணன் என்பவர் ஈக்காட்டுத் தாங்கல் பகுதியில் இருக்கும் ஒரு தனியார் தொலைக்காட்சிக்கு முகவரியிட்டு ஒரு கடிதம் கொடுக்கச் சொன்னதைத் தொடர்ந்து, தாங்கள் அவ்வாறான கடிதத்தினைக் கொடுத்தாகவும், மேற்படி பகுதியில் உள்ள பூங்காவினை சரி செய்து கொடுப்பதாக சொல்லி பேரூராட்சி செயல் அலுவலரிடம் தடையின்மைச் சான்று பெற்று கொடுக்கச் சொன்னதாகவும். இது சம்பந்தமாக பேரூராட்சியிடம் ஒரு மாதத்திற்கு முன் மனு கொடுத்ததாகவும், பேரூராட்சி நிர்வாகத்தினர் ஆய்வு ஏதும் மேற்கொள்ளவில்லை எனவும், இது சம்பந்தமாக பேரூராட்சி பிரிவு எழுத்தர் தீர்மானம் நிறைவேற்றிய பின்னர் பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் ஒப்புதல் பெறப்படவேண்டும் எனச் சொன்னதாகவும், ஆனால் பேரூராட்சி செயல் அலுவலரிடமிருந்து எந்தவிதமான தகவலும் வரப்பெறவில்லை எனவும், தங்களால் பேரூராட்சிகளின் உதவி இயக்குநரைச் சந்திக்க இயலவில்லை எனவும் தெரிவித்துள்ளார். SRM Public School கட்டியுள்ள காம்பவுண்டு சுவரால் தங்கள் பகுதியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு 2016–ஆம் ஆண்டு நவம்பர் மாதம் அழிவு ஏற்பட்டதாகவும், இது குறித்து மாவட்ட ஆட்சியருக்கு மனு செய்ததில், மாவட்ட ஆட்சியர் வெள்ள நீர் போவதற்கு JCB வைத்து வழி செய்ததாகவும், ஆனால் ஆக்கிரமிப்பினை எடுக்கவில்லை எனவும். முழுமையாக இரண்டு சாலைகள் அடைக்கப்பட்டு சுமார் 500 அடி நீளம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு நீர்வழிப் பாதை தடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். அப்போதிருந்த வருவாய் ஆய்வாளர் திரு.முருகன் என்பவர் வெள்ள நீர் தடைபடக் காரணமான SRM Public School ஆக்கிரமிப்பு செய்து கட்டியுள்ள சுவரினை எடுக்காமல், பங்கஜம்மாள் பிரதான சாலையில் செயற்கையாக வழி அமைத்து நெல்லிக்குப்பம் சாலையில் சேர்வதற்கு வழி செய்வதாக உறுதி அளித்ததாகவும் ஆனால் அவ்வாறு செய்யவில்லை எனவும், அந்த சமயத்தில் செயல் அலுவலராக இருந்த திரு.முனியாண்டி என்பவர் மேற்படி மழைநீர் வடிகால் தனியாக அமைத்துத் தருவதாக மாவட்ட ஆட்சியர் தெரிவித்ததாக நவம்பர் மாதத்தில் உறுதி அளித்து அவர் டிசம்பர் மாதத்தில் மாறுதலில் சென்று விட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

இதன் பின்னர் இப்பேரூராட்சியின் பொறுப்பு செயல் அலுவலர் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை எனவும், இந்த பூங்காவின் மொத்த பரப்பளவு 13,700 சதுர அடி எனவும், தற்போது ஒரு சதுர அடி ரூ.2.700/–க்கு விற்கப்படுவதாகவும் இதனடிப்படையில் இப்பூங்காவின் மொத்த மதிப்பு ரூ.3.69 கோடி என்வும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

SRM Public School கட்டிடம் கட்டிக் கொண்டு இருக்கும்போது இந்த பூங்காவில் மேற்படி கல்வி நிறுவனத்தாரால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட இடத்தில் தொழிலாளர்கள் குடியிருக்கும் கட்டிடம் மற்றும் காம்பவுண்டு சுவர் அமைத்ததால், 2016–ஆம் ஆண்டு ஏற்பட்ட வர்தா புயல் மற்றும் 2017–ஆம் ஆண்டு ஏற்பட்ட ஒகி புயலினால் பெரும் பாதிப்பு ஏற்பட்டு, மேற்படி பகுதியில் வெள்ள நீர் புகுந்து இப்பகுதி மக்கள் அனைவரும் கடுமையாக பாதிக்கப்பட்டதாகவும், அப்போது இந்த இடம் முழுமையாக மேற்படி நிர்வாகத்தினரால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு சுற்றுச் சுவர் போடப்பட்டுள்ளதாகவும், இதன் மூலம் தங்கள் பகுதி முழுவதும் வெள்ளக் காலங்களில் கடுமையாகப் பாதிக்கப்பட்டு வருவதாகவும், தங்கள் நலவாழ்வு சங்கம் சிறப்பாகச் செயல்பட ஆக்கிரமிப்புகளை அகற்றி பூங்கவினை உருவாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டுமெனவும். புயல் வெள்ளத்தால் இப்பகுதி மக்கள் பாதிக்கப்பட்டபோது SRM நிறுவனத்தினர் எந்த உதவியும் தங்களுக்குச் செய்யவில்லை எனவும், SRM நிறுவனம் மூலம் பள்ளிக் கட்டிடம் கட்டும்போது பல நன்மைகள் செய்வதாக வாக்குறுதி அளித்து எந்த வாக்குதியினையும் நிறைவேற்றவில்லை எனவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

SRM நிறுவனம் மூலம் கட்டப்பட்டுள்ள 500 அடி நீளமுள்ள காம்பவுண்டால் வெள்ளப்பெருக்கு ஏற்படும் காலங்களில் தங்களுக்கு அதிகளவில் பாதிப்பு ஏற்படுமெனவும், SRM. Public School அமைத்துள்ள டிரான்ஸ்பார்மர் மற்றும் ஜெனரேட்டர் வைத்துள்ள இடம் தனது வீட்டில் இருந்து 6 அடி தூரத்தில் உள்ளதாகவும், இதனால் தன்னால் நிம்மதியாக மேற்படி சத்தத்தில் இருக்க முடியவில்லை எனவும், முதலில் சத்தமே வராது என SRM நிறுவனத்தார் சொன்னதாகவும், இந்த டிரான்ஸ்பார்மர் மற்றும் ஜெனரேட்டர் அமைப்பதற்காக மொத்த சாலையினையும் சேதப்படுத்தி விட்டதாகவும், பேரூராட்சி மூலமே தங்களுக்கு பூங்கா அமைத்து தரவேண்டும் எனவும், மேலும் வெள்ள பாதிப்பில் இருந்து தாங்கள் மீள்வதற்கு ஆக்கிரமிப்புகளை அகற்றி இயற்கையாக நீர்வழிப்பாதை அமைத்துத் தர ஆணையிடவேண்டுமெனவும், பேரூராட்சி மூலம் குறைந்தபட்சம் ஒரு பூங்காவினையாவது அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் எனவும் தனது வாக்குமூலத்தில் முறையீட்டு மனுதாரர் தெரிவித்துள்ளார்.

27.09.2018 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ அழைப்பாணையின் அடிப்படையில், 28.09.2018 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான நந்திவரம்–கூடுவாஞ்சேரி பேரூராட்சி செயல் அலுவர் தனது வாக்குமூலத்தில், பங்கஜம்மாள் நகர் விரிவு–2 பகுதியில் பேரூராட்சி மூலம் பூங்கா அமைக்க 17.09.2018 நாளிட்ட பேரூராட்சி மன்றக் கூட்டத்தில் பொருள் வைக்கப்பட்டுள்ளதாகவும், முறையீட்டு மனுதாரரின் வாக்குமூலம் மீதான அறிக்கையினை விரைவில் அனுப்பி வைப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து நந்திவரம் – கூடுவாஞ்சேரி பேரூராட்சி செயல் அலுவலர் தனது 01.10.2018 நாளிட்ட கடிதத்தில் காஞ்சிபுரம் மாவட்டம், நந்திவரம்–கூடுவாஞ்சேரி பேரூராட்சிக்குட்பட்ட 6–வது வார்டு பங்கஜம்மாள் நகர் விரிவு–2 பகுதியில் நகர் ஊரமைப்புத் துணை இயக்குநர் கடித எண்.2005/90–LP 63ன்படி அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவில் பூங்காவிற்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக பூங்காவாக பராமரிக்க ஏதுவாக, 2018 செப்டம்பர் மாதம் நடைபெற்ற பேரூராட்சி மன்றக் கூட்டத்தில் பொருள் வைக்கப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாகவும், இதன் தொடர்ச்சியாக பேரூராட்சிப் பொறியாளருக்கு உரிய மதிப்பீடுகள் தயாரிக்க கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளதாகவும், உரிய மதிப்பீடுகள் கிடைக்கப்பெற்றதும் முறையாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, பேரூராட்சி நிதியிலிருந்து பணிகள் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்து பேரூராட்சி மன்ற தீர்மான எண்.289/17.09.2018க்கான நகலினையும் இணைத்து சமர்ப்பித்துள்ளார்.

22.01.2019 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணையில், முறையீட்டு மனுதாரரின் 20.08.2018 நாளிட்ட வாக்குமூலத்தில் தெரிவித்துள்ள பூங்கா பகுதியில் உள்ள நீர்வழி ஆக்கிரமிப்புக்கள் அகற்றப்பட்டது குறித்தும், மேற்படி பூங்கா அமைத்தல் தொடர்பான பணி குறித்த விவரங்களையும் தெரிவிக்க நந்திவரம் – கூடுவாஞ்சேரி பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

08.02.2019 நாளிட்ட நந்திவரம்–கூடுவாஞ்சேரி பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கையில், காஞ்சிபுரம் மாவட்டம், நந்திவரம்–கூடுவாஞ்சேரி பேரூராட்சிக்குட்பட்ட 6–வது வார்டு பங்கஜம்மாள் நகர் விரிவு–2ல் நகர் ஊரமைப்புத்துறை துணை இயக்குநர் கடித எண்.2005/90–LP 63ன்படி அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவில் பூங்காவிற்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் பொதுமக்கள் பயன்பாட்டிற்குப் பூங்காவாக பராமரிக்க ஏதுவாக 2018 செப்டம்பர் மாத மன்றக் கூட்டதில் பொருள் வைக்கப்பட்டு தீர்மானம் இயற்றப்பட்டதாகவும், இதனடிப்படையில் மேற்படி பணியினை பேரூராட்சி பொதுநிதியில் மேற்கொள்ள ரூ.20.00 லட்சத்திற்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, உரிய நிர்வாக அனுமதி மற்றும் மதிப்பீட்டிற்கான தொழில் நுட்ப அனுமதிகள் பெறப்பட்டு, 25.01.2019 நாளிட்ட ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பின்படி 13.02.2019ல் ஒப்பந்தப்புள்ளி பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், மேற்படி பங்கஜம்மாள் நகர் மனைப்பிரிவில் பேரூராட்சிக்கு ஒப்படை செய்யப்பட்ட இடத்தில் எவ்வித ஆக்கிரமிப்பும் இல்லை எனவும் தெரிவித்துள்ளார்.

நந்திவரம்–கூடுவாஞ்சேரி பேரூராட்சி செயல் அலுவலர் தனது அறிக்கையில் முறையீட்டு மனுதாரர் தனது 20.08.2018 நாளிட்ட வாக்குமூலத்தில் தெரிவித்துள்ள மனைப்பிரிவில் அமைக்கப்பட்டுள்ள பூங்கா பகுதியில் நீர் வழிப்பாதை ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது தொடர்பாகவோ, அனுமதிக்கப்பட்ட பூங்கா எவ்வித ஆக்கிரமிப்பும் இன்றி பேரூராட்சி வசம் உள்ளது என்பதற்கான எந்த விவரமும் தனது அறிக்கையில் தெரிவிக்காத நிலையில் மேற்படி பூங்கா பகுதியில் உள்ள நீர் வழிப்பாதைகள் ஆக்கிரமிப்பு தொடர்பாகவும், மனைப்பிரிவில் அனுமதிக்கப்பட்ட பூங்காவின் விஸ்தீர்ணம், பூங்கா பேரூராட்சி கட்டுப்பாட்டில் உள்ள

விவரத்தினை தெரிவிக்கக் கோரி 06.03.2019 நாளிட்ட அறிவிப்பாணை மூலம் நந்திவரம்–கூடுவாஞ்சேரி பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

நந்திவரம்–கூடுவாஞ்சேரி பேரூராட்சி செயல் அலுவலரின் 12.03.2019 நாளிட்ட அறிக்கையில் காஞ்சிபுரம் மாவட்டம், நந்திவரம் – கூடுவாஞ்சேரி பேரூராட்சிக்குட்பட்ட 6–வது வார்டு பங்கஜம்மாள் நகர் விரிவு–2ல் நகர் ஊரமைப்புத் துணை இயக்குநரின் கடித எண்.2005/90–LP63, ன்படி அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவில் பூங்காவிற்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் தானப்பத்திரம் எண்.5352/2005 நாள். 06.06.2005ன்படி மொத்த விஸ்தீரணம் 13,720 சதுர அடி எனவும், முறையீட்டு மனுதாரர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளது போல் பங்கஜம்மாள் நகர் மனைப்பிரிவு பூங்கா பகுதியில் எவ்வித நீர் வழிப்பாதையும் அமையப்பெறவில்லை என்ற விவரம் நேரடி ஆய்வின்போது அறியப்பட்டதாகவும், இவ்விடத்தில் 2015–ஆம் ஆண்டு ஏற்பட்ட மழை வெள்ளத்தின்போது எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை எனவும் இதன் காரணமாக பங்கஜம்மாள் நகர் மனைப்பிரிவு குடியிருப்புகள் ஏதும் எவ்வித பாதிப்புக்குள்ளாகவில்லை எனவும் தெரிவித்துள்ளார். மேலும் பேரூராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ள இடத்தில் எவ்வித ஆக்கிரமிப்பும் இல்லை எனவும், மேற்படி பூங்காவிற்கான நிலம் பேரூராட்சியின் கட்டுப்பாட்டில் உள்ளதாகவும், முறையீட்டு மனுதாரரின் வாக்குமூலத்தில் பங்கஜம்மாள் நகர் பகுதியில் டிரான்ஸ்பார்மர் மற்றும் ஜெனரேட்டர் நிறுவியதின் காரணமாக சாலைகள் முழுவதுமாக சேதமடைந்துள்ளது என்ற புகார் குறித்தும் ஆய்வு செய்யப்பட்டதாகவும் அவ்வாறு எந்த சாலையும் சேதமடையவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

நந்திவரம் கூடுவாஞ்சேரி பேரூராட்சி, பங்கஜம்மாள் நகர் விரிவு–2 பகுதியில் அமைந்துள்ள எஸ்.ஆர்.எம்.கல்வி நிறுவனத்தின் மூலம் நீர் வழிப்பாதைகள் ஆக்கிரமித்துள்ளது தொடர்பாக விசாரணை மேற்கொள்ள காஞ்சிபுரம் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநருக்கு 03.12.2019 நாளிட்ட அழைப்பாணை மூலம் 23.01.2020 அன்று ஆஜராக ஆணையிடப்பட்டதில், 23.01.2020 அன்று ஆஜரான காஞ்சிபுரம் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரிடம் புகாருக்குட்பட்ட பகுதியினை ஆய்வு மேற்கொண்டும், முறையீட்டு மனுவில் சாட்சியாக தெரிவித்துள்ள திருமதி அனுசுயா என்பவரிடம் விசாரணை மேற்கொண்டும் மேற்படி கல்வி நிறுவனம் மூலம் நீர்வழிப்பாதை ஆக்கிரமித்துள்ளது தொடர்பாக ஆய்வு மேற்கொண்டும் அறிக்கை சமர்ப்பிக்க ஆணையிடப்பட்டது.

28.02.2020 நாளிட்ட காஞ்சிபுரம் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் அறிக்கையில் 08.02.2020 அன்று புகாருக்குட்பட்ட பகுதியில் ஆய்வு மேற்கொண்டதாகவும், புகார் மனுவில் சாட்சியாக குறிப்பிட்டுள்ள திருமதி அனுசுயா பன்னீர் செல்வம் என்பவர், பேரூராட்சிகளின் உதவி இயக்குநருக்கு முகவரியிட்ட மனுவில் புகாருக்குட்பட்ட பகுதி மேடான மலை சூழ்ந்த பகுதி எனவும், மழைக்காலங்களில் மேற்கிலிருந்து வரும் மழை நீர் கிழக்கு நோக்கி பங்கஜம்மாள் நகரினை கடந்து நந்திவரம் ஏரிக்கு சென்றடையும் எனவும், 2017–ஆம் ஆண்டு எஸ்.ஆர்.எம்.கல்வி நிறுவனத்தாரால் தங்கள் நகர் கிழக்குப் பகுதியில் 670 அடி நீள சுற்றுச் சுவர் கட்டப்பட்டதால் மழை நீர் செல்வதற்கு வழி இல்லை எனவும், மழை வெள்ள பாதிப்பு நேராமல் இருக்க தங்கள் நகரின் பிரதான சாலையின் மேற்கு பகுதியில் விநாயகா அபார்ட்மெண்ட்ஸ் தொடங்கி, ஆரோக்கிய அன்னை மருத்துவமனை, நெல்லிக்குப்பம் சாலை வரை மழை நீர் வடிகால் அமைத்து தரக் கோரியதைத் தொடர்ந்து, இப்பணியினை நந்திவரம் கூடுவாஞ்சேரி பேரூராட்சி பொது நிதியில் இருந்து ரூ.17.50 லட்சம் மதிப்பீட்டில் வடிகால் பணியும், ரூ.4.25 லட்சம் மதிப்பீட்டில் சிறுபாலங்களும் கட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும், இப்பணிகளை உரிய ஒப்பந்தப்புள்ளிகள் கோரி மேற்கொள்ள துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என செயல் அலுவலரால் தெரிவிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நேர்வில், முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனு, முறையீட்டு மனுதாரர் மற்றும் நந்திவரம்–கூடுவாஞ்சேரி பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோர்களின் வாக்குமூலம், நந்திவரம்–கூடுவாஞ்சேரி பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கைகள் மற்றும் காஞ்சிபுரம் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் ஆய்வறிக்கை ஆகியன பரிசீலிக்கப்பட்டன. நந்திவரம்–கூடுவாஞ்சேரி பேரூராட்சி செயல் அலுவலர் தனது 12.03.2019 நாளிட்ட அறிக்கையில் பங்கஜம்மாள் நகர் விரிவு–2 பகுதியில் நகர் ஊரமைப்புத் துணை இயக்குநரால் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவில் பூங்காவிற்கென ஒதுக்கப்பட்ட இடம் 13.720 சதுர அடிகள் எவ்வித ஆக்கிரமிப்பும் இன்றி பேரூராட்சியின் கட்டுப்பாட்டில் உள்ளதாகவும், ஜெனரேட்டர் மற்றும் டிரான்ஸ்பார்மர் பொருத்திய விதத்தில் சாலைகள் ஏதும் சேதப்படுத்தப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளதால்

மேற்படி பூங்காவினை பராமரிக்க பேரூராட்சி மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். மேலும், காஞ்சிபுரம் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் ஆய்வறிக்கையில் இப்பகுதியில் வெள்ளப்பெருக்கு ஏற்படாமல் தடுக்கும் பொருட்டு வடிகால் மற்றும் சிறுபாலங்கள் அமைக்க பேரூராட்சி பொது நிதியில் மொத்தம் ரூ.21.75 லட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் புகாருக்குட்பட்ட சுமார் ரூ.3.69 கோடி மதிப்பிலான பொதுப்பயன்பாட்டிற்கான பூங்கா, இம்முறைமன்ற நடுவ நடவடிக்கைகளுக்குப் பின்னர் பேரூராட்சியின் உரிய கண்காணிப்பிற்கு கொண்டு வரப்பட்டு மேம்பாடு/பராமரிப்புப் பணிகள் உறுதி செய்யப்பட்டுள்ளது. எனவே பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் ஆய்வறிக்கை பதிவு செய்யப்பட்டு, இப்பொருள் தொடர்பான இம்முறைமன்ற நடுவ தொடர் நடவடிக்கையினை கைவிடலாமென முடிவெடுத்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது. இருப்பினும் பூங்கா பராமரிப்பு/மேம்பாட்டு பணிகளை தொய்வின்றி உரிய காலக்கெடுவிற்குள் முடித்திட செயல் அலுவலருக்கு வலியுறுத்தி ஆணையிடப்படுகிறது.

2020–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 04 –ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

–//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//–

பெறுநர்

1.திரு. எஸ். சிவநாதன்,
Plot No 39,
பங்கஜம்மாள் நகர் விரிவு– II,
நந்திவரம் கூடுவாஞ்சேரி,
சென்னை 603 202.

2.செயல் அலுவலர்,
நந்திவரம் கூடுவாஞ்சேரி பேரூராட்சி,
கூடுவாஞ்சேரி,
காஞ்சிபுரம் மாவட்டம்–603202.

3.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
காஞ்சிபுரம் மண்டலம்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
காஞ்சிபுரம்.

4.பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை–28.

மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனி எழுத்தர்.
முறைமன்ற நடுவ செயலாளரின் தனி எழுத்தர்.
ஊராட்சிகள் பிரிவு உதவிப் பிரிவு அலுவலர்.